# இயக்கூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம், கோபிசெட்டிபாளையம்

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 17-ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

MCOP.No. 282/2022

**ம.சா. 1**

**திருமதி. அருக்காணி**

**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு முதல்விசாரணை தொடர்ச்சி**

நான் மனுவுடன் தாக்கல் செய்துள்ள 21-01-2022 தேதியிட்ட டிஸ்சார்ஜ் சம்மரி ம.சா.ஆ.10 ஆகவும், எனது மருத்துவ செலவினங்களுக்கான பில்கள் ம.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யுமாறு வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை (3 ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

ம.சா.ஆ.10 மற்றும் 11 ஆவணங்கள் ஏற்கனவே முதல்விசாரணை சாட்சியத்தில் தாக்கல்செய்யாமல் பின்னிட்டு இந்த மனுவிற்காக உற்பத்தி செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவே மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றால் சரியல்ல.